**செ. கு. எண்**: 293 **நாள்**: 18-08-2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 18.8.2012

உச்சநீதிமன்ற உத்தரவின்படி விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சிறுகுளம் கண்மாய் புறம்போக்கு தந்தை பெரியார் நகர் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் 18.8.2012 அன்று விருதுநகர் மாவட்ட நிருவாகம் ஈடுபட்டிருந்த போது, தந்தை பெரியார் நகரில் குடியிருக்கும் திரு. காளியப்பத் தேவர் என்பவரின் மகன் திரு. கணேசன் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த திரு. கணேசன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த திரு. கணேசன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**